**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 448** **நாள்: 02.12.2023**

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டும், வங்கக்கடலில் உருவாகியுள்ள புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையிலும் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்களுடன் காணொலி வாயிலாக ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், வங்கக்கடலில் உருவாகியுள்ள புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்களுடன் காணொலி வாயிலாக ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் தலைமையில் இன்று (02.12.2023) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஒவ்வொரு மண்டலத்திலும் மழை மற்றும் எதிர்வரும் புயல் தாக்கத்தினை முன்னிட்டு, மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை, பாதுகாப்பு மற்றும் களப்பணி நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு மேயர் அவர்கள் ஆய்வு செய்து, மழையின் காரணமாக தேங்கும் மழைநீரை உடனுக்குடன் அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், போதுமான பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், அனைத்து அலுவலர்களும் கூடுதல் கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வுடன் பணியாற்றிட வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு மாண்புமிகு மேயர் அவர்கள் அறிவுறுத்தினார்.

**செய்தியாளர்கள் சந்திப்பில் மாண்புமிகு மேயர் அவர்கள் பேசியதாவது:**

வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ள நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கனமழை மற்றும் மிக கனமழையும் பெய்துள்ளது. கடந்த 21.11.2023 அன்று இரவு 7 மணி முதல் 9 மணி வரை 14 செ.மீ. முதல் 20 செ.மீ. வரை மழை பதிவாகியுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 30.11.2023 அன்று காலை ரிப்பன் கட்டடத்திற்கு நேரடியாக வருகைபுரிந்து ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு மற்றும் களப்பணி நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, இதுகுறித்த ஆய்வுக்கூட்டமும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டு, பருவமழை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவுரைகளை வழங்கியுள்ளார்கள்.

02.12.2023, 03.12.2033, 04.12.2023 மற்றும் 05.12.2023 ஆகிய 4 நாட்களுக்கு மழைப்பொழிவும், 04.12.2023 அன்று மாலை புயலின் தாக்கமும் இருக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து இன்று ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்கூட்டத்தில் 15 மண்டலங்களில் உள்ள மண்டல கண்காணிப்பு அலுவலர்கள், மண்டல அலுவலர்கள், தலைமைப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவி/இளநிலைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

மழை மற்றும் புயலை எதிர்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், கூடுதலாக மோட்டார் பம்புகள் தேவைப்படும் இடங்கள் குறித்தும் தெரிவிக்கப்பட்டது. மண்டலங்கள் வாரியாக கூடுதலான மோட்டார் பம்புகள் தேவைப்படும் அனைத்து இடங்களுக்கும் இன்று இரவிற்குள் மோட்டார் பம்புகள் வழங்கப்படும். குறிப்பாக மாதவரம், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம் மற்றும் பெருங்குடி ஆகிய மண்டலங்களில் அதிகளவில் கூடுதலாக மோட்டார் பம்புகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 23,000 பணியாளர்கள் களப்பணியாற்றி வருகின்றனர். மழைக்காலத்தினை முன்னிட்டு மண்டலத்திற்கு கூடுதலாக 10 பணியாளர்கள் வீதம் 200 மண்டலங்களுக்கும் 2000 கூடுதல் பணியாளர்கள் நியமித்து பணிபுரிந்து வருகின்றனர். இரவு நேரங்களில் 16,000 பணியாளர்கள் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், மாநில பேரிடர் மீட்புக் குழுவைச் சார்ந்த 100 பணியாளர்கள் மற்றும் மாநில பேரிடர் மீட்புக் குழுவைச் சார்ந்த 25 பணியாளர்கள் தயார்நிலையில் உள்ளனர்.

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நிவாரண மையங்கள் தேவைப்படும் இடங்களுக்கு நிவாரண மையங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அங்கு தங்கும் பொதுமக்களுக்கு உணவு வழங்க உணவு தயாரிக்கும் மையங்களை தயார்நிலையில் வைத்திருக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைக்காலத்தில் பணிகள் மேற்கொள்வதற்காக கடந்த ஆண்டு ஒவ்வொரு மண்டலத்திற்கும் ரூ.5 இலட்சம் ஒதுக்கப்பட்ட நிலையில் தற்பொழுது ஒவ்வொரு மண்டலத்திற்கும் ரூ.20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. உணவு வழங்குதல், கூடுதலாக மர அறுவை இயந்திரங்கள், மோட்டார் பம்புகள் போன்ற எதிர்பாராத தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் ரூ. 20 இலட்சம் முன் பணமாக வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்களது குறைகளைத் தெரிவிப்பதற்காக 1913 என்ற உதவி எண்ணில் 15 இணைப்புகளுடன் செயல்பட்டு வந்த நிலையில் தற்போது 30 இணைப்புகளாக உயர்த்தப்பட்டுள்ளது.

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வார்டு வாரியாக பழைய, விழும் நிலையில் மற்றும் ஆபத்தான நிலையில் உள்ள மரங்களின் கிளைகளை அகற்றிட உத்தரவிடப்பட்டுள்ளது என மாண்புமிகு மேயர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார் அவர்கள், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., அவர்கள், இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், மண்டல கண்காணிப்பு அலுவலர்கள், தலைமைப் பொறியாளர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**